1994 ஜனவரி 5]

161--

பரமக்குடி ஜீவாநகர் வாக்குச்சாவடியை மாற்றுதல்

***20403–டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகர், ஜீவாநகர் வாக்குச்சாவடியை எமனேஸ்வரம் நடுநிலைப்பள்ளிக் கட்டிடத்தில் இருந்து எஸ்.என். அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் 200-பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி நகர் ஜீவாநகர் வாக்குச்சாவடியை எமனேஸ்வரம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக் கட்டிடத்திலிருந்து ஜீவா நகருக்கு அருகில் உள்ள எஸ். என். அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்திற்கு மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ளார். அவைகள் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு மக்களைச் சந்தித்து, அதிக வாக்குகள் பெற்று ஆட்சி நடத்த வேண்டுமென்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வாக்காளர்கள் அதிக தூரம் நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய நிலையை உணர்ந்து, நீண்ட தூரத்தில் சென்று வாக்களிக்கும் மக்களுக்கு, அருகில் உள்ள வாக்குச்சாவடிகளை அமைக்க வேண்டுமென்ற நோக்கில் மாவட்ட ஆட்சியகம் அனுப்பிய பிரேரணை தேர்தல் ஆணையத்திற்கு, அதன் ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தேர்தல் ஆணையத்திடமிருந்து எப்போது ஒப்புதல் கிடைக்கப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட எல்லா மாற்றங்கள் குறித்தும் அவர்கள் ஆய்வு செய்ததற்குப் பிறகு இங்கே அனுப்புவார்கள். அதை விரைவிலே அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள ஒன்றியப் பகுதி மக்கள் அந்த ஒன்றியத்தினை ஒட்டியுள்ள வாக்குச்சாவடிகளில்தான் வாக்களிக்க முடிகின்றது. இதனால் சில இடங்களில் அப்பகுதி மக்கள் வாக்களிக்க தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளை ஒட்டியுள்ள ஒன்றியப் பகுதி மக்கள் அந்த நகராட்சிப் பகுதிகளுக்கு அருகிலேயே வாக்களிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்படையாக எந்தவொரு முடிவும் எடுக்க இயலாது. ஆனால் அங்கு வாழுகின்ற மக்களுடைய எண்ணிக்கை, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் இருக்கவேண்டிய வாக்காளர்களுடைய எண்ணிக்கை, மக்கள் நடந்து செல்ல வேண்டிய தொலைவு இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் ஆங்காங்கே வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, இந்த வாக்குச்சாவடியிலே ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டும், மக்களுக்கு சௌகரியமாகவும், வசதியாகவும் இருக்கும் பொருட்டு அண்மையிலே கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்ற குறிப்புகள் இருந்தால் அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணையை அனுப்பி வைக்கலாம் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவைகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பெற்று ஆணையத்தின் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வரும். கூடுமான வரையில் மக்கள் அதிக தொலைவு நடந்து செல்லாமல் வாக்களிப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய யோசனையின் அடிப்படையில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று செயல்பட்டு வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் பரமக்குடி நகரில் *(மணியடிக்கப்பெற்றது)*.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டுவிட்டீர்கள்.

வினா எண் *162*, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

162--

வரதட்சணை வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் துவங்குதல்

9764*-திரு. ஓ. எஸ். அமர்நாத்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--